| காலாண்டுத் தேர்வு - 2024 | | தேர்வு எண் |
|---|---|---|
| காலம் : 3.00 மணி | XII - வணிகவியல் | மதிப்பெண் : 90 |

## பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)
2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு ______
அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல்

2. ______ல் நிர்வாக செயல்பாடுகளும் உள்ளடங்கியுள்ளது
அ) ஒருங்கிணைத்தல் ஆ) கட்டுப்படுத்துதல்
இ) பணியமர்த்துதல் ஈ) ஒழுங்கமைத்தல்

3. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது
ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது
ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

4. உடனடிச் சந்தை என்பது நிதிக் கருவிகள் விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் ______ நடைபெறும் ஒரு சந்தை ஆகும்
அ) உடனடியாக ஆ) எதிர்காலத்தில்
இ) நிலையானது ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்

5. NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
அ) 1990 ஆ) 1992 இ) 1998 ஈ) 1997

6. சந்தைப்படுத்தக் கூடிய உரிமையியலான ஆவணம், காலமுறை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற் எனக் குறிப்பிடப்படும் ஆவணத்தை ______ என்று குறிப்பிடுகிறோம்
அ) கருவூல இரசீது ஆ) வைப்புச் சான்றிதழ்
இ) வணிக இரசீது ஈ) அரசுப் பத்திரங்கள்

7. ______ இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்
அ) இலண்டன் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை
இ) தேசிய பங்குச் சந்தை ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை

8. கூட்டு முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ______ எனப்படுகிறது
அ) பரஸ்பர நிதிகள் ஆ) பட்டியல்
இ) மறுபுறத்தோற்றமற்ற பத்திரங்கள் ஈ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள்

9. மனித வளம் என்பது ஒரு ______ சொத்து
அ) கண்ணுக்கு புலனாகும் ஆ) கண்ணுக்கு புலனாகா
இ) நிலையான ஈ) நடப்பு

10. விளம்பரம் என்பது ஒரு ______ ஆட்சேர்ப்பு வளமாகும்
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள்
இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

11. பொருத்தமற்ற விண்ணப்பதாரரை நீக்குவதற்கான செயல்முறை ______ அழைக்கப்படுகிறது
அ) தேர்வு ஆ) ஆட்சேர்ப்பு இ) நேர்காணல் ஈ) தூண்டுதல்

12. பயிற்சி முறைகளை ______ பயிற்சி என வகைப்படுத்தலாம்
அ) வேலை சுழற்சி மற்றும் வேலை செறிவூட்டல்
ஆ) பணிவழி மற்றும் பணிவழியற்ற பயிற்சி
இ) வேலை பகுப்பாய்வு மற்றும் வேலை வடிவமைப்பு
ஈ) உடல் மற்றும் மனம்

13. சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

14. இந்திய ரிசர்வ் வங்கியின் கீழுள்ள ______ அரசு பத்திரங்களை வெளியிடுகிறது
அ) மாநில அரசுகள் ஆ) பங்கேற்பாளர்கள்
இ) பரஸ்பர நிதி நிறுவனங்கள் ஈ) பொது கடன் அலுவலகம்

15. கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத ஒரு கூறு எது?
அ) இடக் கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக் கூறு ஈ) விலை கூறு

16. சமூக ஊடக சந்தைப்படுத்துதலை சிறப்பாக செயல்படுத்துவது ______ மாற்று விகிதத்தை அதிகரிக்கும்
அ) வாடிக்கையாளரிலிருந்து வாங்குபவராக
ஆ) சில்லறை வியாபாரியிலிருந்து வாடிக்கையாளராக
இ) வாங்குபவரிலிருந்து மற்றும் ஒரு வாங்குபவராக
ஈ) சந்தையாளருக்கு நேரடி தொடர்பு



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

17. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 01.01.1996 ஆ) 01.04 1986
இ) 15.04.1987 ஈ) 15.04.1990
18. ஏற்கனவே இயங்கி கொண்டிருக்கும் நிறுமம் கூடுதல் முதலை திரட்ட விரும்பும்போது முன்னுரிமை அடிப்படையில் தனது பங்குதாரர்களுக்கு முதலில் பங்குகளை முன்மொழிகிறது. இதுவே ______ எனப்படும்
அ) பொது வெளியீடு ஆ) தனியார் வெளியீடு
இ) உரிமை வெளியீடு ஈ) பத்திரங்களின் சந்தை
19. நுகர்வோரின் பொறுப்பு என்பது அவர் பெற்றுள்ள ______ ஆவணமே பொருட்களை வாங்கியதற்கான அடையாளமாகும்
அ) ரொக்க ரசீது ஆ) உத்தரவாத அட்டை
இ) இடாப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்
20. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவர் யார்?
அ) இந்திய உச்ச நீதிமன்றத்தின் சேவை அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி
ஆ) பிரதம மந்திரி
இ) இந்திய தலைவர் ஈ) மேலே குறிப்பிடப்பட்டவை அல்ல

## பகுதி - 2

***குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (கட்டாய வினா 30)*** ***(7x2=14)***

21. மேலாணமை என்றால் என்ன?
22. குறியிலக்கு மேலாண்மையின் ஏதேனும் இரண்டு நன்மைகளை குறிப்பிடுக.
23. கடன் சந்தை என்றால் என்ன?
24. ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது?
25. இந்தியாவில் உள்ள ஏதேனும் 5 பங்குச் சந்தைகளை பற்றி எழுதுக.
26. மனித வள மேலாண்மை என்றால் என்ன?
27. ஆட்சேர்ப்பு முயைில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
28. சந்தையிடுகையாளர் வரைவிலக்கணம் தருக.
29. தரமுடைய பொருட்கள் வாங்கும்போது நுகர்வோர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் யாவை?
30. ஏதேனும் நான்கு போட்டி கேள்விகளை எழுதுக.

## பகுதி - 3

***குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (கட்டாய வினா 40)*** ***(7x3=21)***

31. விதிவிலக்கு மேலாண்மையில் உள்ள செயல்முறைகள் யாவை?
32. தேசிய தீர்வக மற்றும் கள ஆசிய அமைப்பு (NCDS)-சிறுகுறிப்பு வரைக.
33. கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
34. காளை மற்றும் கரடி - விளக்குக.
35. புறத்தோற்றமற்ற பத்திரங்கள் என்றால் என்ன?
36. வேலைவாய்ப்பு இணையதளங்கள் என்றால் என்ன?
37. உயர்மட்டக் குழு நேர்காணல் எப்படி நடத்தப்படுகிறது?
38. தொழிற்சாலைக்குள் பயிற்சி என்றால் என்ன?
39. சந்தையிடுகையாளரின் பங்களிப்பு எவையேனும் மூன்றினை குறிப்பிடுக.
40. நுகர்வோர் நலன் பாதுகாப்பில் ஐக்கிய நாடுகள் சபையின் ஏதேனும் மூன்று நோக்கங்கள் யாவை?

## பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.*** ***(7x5=35)***

41. அ) மேலாண்மையின் அடிப்படைக் கருத்துகளை விவரி.
***(அல்லது)***
ஆ) மேலாண்மையின் பல்வேறு முக்கிய பணிகளை விளக்குக.
42. அ) குறியிலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை?
***(அல்லது)***
ஆ) நிதிச் சந்தையின் பல்வேறு வகையான புதிய நிறுவனங்களை விளக்குக.
43. அ) பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. ***(அல்லது)***
ஆ) செபியின் அதிகாரங்களை விவரி.
44. அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக.
***(அல்லது)***
ஆ) பணியாளர்களை தேர்ந்தேடுப்பதற்கான முக்கியமான நேர்காணலின் வகைகளை விளக்குக.
45. அ) சந்தை எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? விவரி. ***(அல்லது)***
ஆ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை குறிப்பிடுக.
46. அ) மின்னனு சந்தையிடுதலின் நன்மை தீமைகளை விளக்குக.
***(அல்லது)***
ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?
47. அ) தேசிய ஆணையத்தின் ஒட்டுமொத்த பணிகளை விரிவாக விளக்குக.
***(அல்லது)***
ஆ) ஏதேனும் 5 பங்குச் சந்தை பணிகளை விவரி.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com